ES-5/Engg.(DB)/O.M/2022-23
உழவர்கரை நகராட்சி
புதுச்சேரி-5
---

உழவர்கரை, தேதி 01/07/2024

# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

உழவர்கரை நகரசபை சார்பாக அரசுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கீழ்கண்ட வேலைக்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரவேற்கப்படுகிறது. புதுச்சேரி பொதுப்பணித்துறை, மத்திய பொதுப்பணித்துறை, இராணுவ பொறியியல் பணி, இரயில்வே, பிற மாநில பொதுப்பணித்துறையில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்கள் மற்றும் கீழ்கண்ட வேலைகளில் தகுந்த முன் அனுபவம் உள்ளவர்கள் இந்த ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள தகுதி வாய்ந்தவர்களாவர். மேலும் புதுச்சேரி பொதுப்பணித்துறையில் பதிவு செய்யாத ஒப்பந்ததாரர்கள் கடந்த இரண்டு வருடங்களில் கீழ்க்கண்ட குறிப்பிட்ட வேலையில் தகுந்த முன் அனுபவம் பெற்றவர்களாகவும் அதற்கு ஆதாரமாக திருப்திகரமான முறையில் முடித்தற்கான ஆவணங்களைச் சமர்பிக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான கட்டணம் செலுத்துவதற்கு கடைசி தேதி மற்றும் நேரம் | : | 04-07-2024 அன்று மாலை 4.00 மணிவரை |
| 2 | கட்டணம் செலுத்தியவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்கப்படும் கடைசி தேதி மற்றும் நேரம் | : | 05-07-2024 அன்று மாலை 4.00 மணிவரை |
| 3 | ஒப்பந்தப்புள்ளி சமர்பிக்கும் கடைசி தேதி மற்றும் நேரம் | : | 08-07-2024 அன்று மாலை 3.30 மணிவரை |
| 4 | ஒப்பந்தப்புள்ளி திறக்கும் கடைசி தேதி மற்றும் நேரம் | : | 08-07-2024 அன்று மாலை 4.00 மணி |

| வ. எண் | வேலையின் பெயர் | தொகை மதிப்பு ரூ. | முன் வைப்பு தொகை ரூ. | ஒப்பந்தப் படிவத்தின் விலை மற்றும் 5% GST வரி (திரும்ப பெறயியலாது) ரூ. | ஒப்பந்த தாரரின் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | புதுச்சேரி, உழவர்கரை நகராட்சிக்குட்பட்ட சாணரபேட்டில் உள்ள பழைய துப்புரவாளர் குடியிருப்பை இடித்து அப்புறப்படுத்துதல் **(2-வது அழைப்பு).** | 16,393/- | 8,197/- | 150/- (+) GST @ 5% | வகுப்பு-5, அதற்கு மேல் மற்றும் தகுந்த முன் அனுபவதாரர்கள் |

**(P.T.O)**

d:\demolishwork2021\demolish-tendernotice2021.doc

1. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் ஆணையர், உழவர்கரை நகராட்சி, புதுச்சேரி அவர்களால் மேலே குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் பெற்றுக்கொள்ளப்படும்.

2. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளை ஆணையர், உழவர்கரை நகராட்சி அலுவலகத்தில், நெடுவரிசை எண். 5-ல் குறிப்பிட்டுள்ள படி தொகையை (GST வரி 5% உட்பட) பணமாக (திரும்ப பெற இயலாது) இவ்வேலைக்கு செலுத்தி மற்றும் நெடுவரிசை எண் 4-ல் குறிப்பிட்டுள்ளபடி முன் வைப்புத் தொகையையும் கீழே குறிப்பிட்டுள்ள முறைபடி செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

3. முன்வைப்பு தொகையை அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கியின் வரைவோலையாக ஒப்பந்தப்புள்ளி படிவங்களை கோரும் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். முன்வைப்பு தொகையை ஆணையர், உழவர்கரை நகராட்சி, புதுச்சேரி பெயருக்கு செலுத்தப்படவேண்டும்.

4. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை http://www.py.gov.in/tenders/ என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் (Down load) செய்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் தொகை (GST வரி 5% உட்பட) மற்றும் முன்வைப்புத் தொகை இரண்டையும் ஆணையர், உழவர்கரை நகராட்சி, புதுச்சேரி என்ற பெயரில் வரைவோலையாக (Demand Draft) தனி தனி உரையில் இட்டு ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து சமர்பிக்க வேண்டும். அவ்வாறு வரைவோலை மற்றும் ஒப்பந்ததாரரின் தகுதி சான்றிதழ் இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

5. ஒப்பந்தப்புள்ளி பிரிக்கப்படும் நாள் பொது விடுமுறையாக இருப்பின் அடுத்த வேலை நாளில் பிரிக்கப்படும்.

6. வேலைக்கான காலம் மழைக்காலத்தையும் உட்படுத்தப்பட்டது. மேலும் வேலை உத்தரவு வழங்கிய தேதியிலிருந்து 5-வது நாள் பணி தொடங்கப்பட வேண்டும்.

7. முன்வைப்புத் தொகையை மேலே குறிப்பிட்ட வண்ணம் செலுத்தாத ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

8. உழவர்கரை நகரசபைக்கு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஒப்பந்தப்புள்ளியை நிராகரிக்க உரிமை உண்டு.

**(A. சுரேஷ்ராஜ்)**
ஆணையர்

1/6

**நகல்**
கணக்கு பிரிவு,
உழவர்கரை நகராட்சி.